நாவுல பிரதேச சபை - 2020

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நாவுல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவுல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெலபகஹவத்த வீதி கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யும் நிர்மாணத்திற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 99,737 ஆன கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யாமல் செலுத்த வேண்டிய பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை உடன்படிக்கைகளுக்கு வராமல் இருந்த பஹல போபெல்ல குறுக்கு வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் ரூபா 200,000 ஆன மதிப்பீட்டுப் பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| (i) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 22(1) | | | |
| | | நாவுல ஹபரகடவில் அமைந்துள்ள 5 ஏக்கர் அளவிலான காணி லேன்ட் சேல் நிறுவானத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது பகிரங்க ஏலத்தில் காணி விற்பனை செய்யும் போது பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய 78.88 பேர்ச் காணித் துண்டிலிருந்து ரூபா 1,867,680 பெறுமதியான 51.88 பேர்ச் அளவிலான காணியை பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட நடவடிக்கை களுக்காக குறித்த ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தை ம அவதானிக்கப்பட்டது. | காணித் துண்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) பிரிவின் பிரகாரம் | | | |
| | | நாவுல ஹபரகடவில் அமைந்துள்ள 5 ஏக்கர் அளவிலான காணியில் இருந்து ரூபா 17,565,000 ஆன காணித் துண்டுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி அடிப்படையில் 1 சதவீத வரியாக ரூபா 175,650 தொகை அறவிடப்பட்டிருந்தது. விற்பனை செய்யப்பட்ட பெறுமதியை இனங்கண்டு அறவிட வேண்டிய திட்டவட்டமான எஞ்சிய தொகையை விற்பனையாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய தொகை அறவிடப்பட்டுள்ளதாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 104(4) | சபைக்குரிய கெப் வண்டி 2019 நவம்பர் 17 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த போதும் 2020 ஒக்தோபர் 06 ஆந் திகத வரை பரிசோதனையொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த வாகனம் விபத்திற்குட்பட்டமையால் ரூபா 545,973 ஆன திருத்தச் செலவின மொன்றை செலவிடுவதற்கு நேர்ந்திருந்த போதும் காப்புறுதி மேவுகையாக ரூபா 289,685 மாத்திரம் கிடைத்த காரணத்தினால் சபை நிதியத்திற்கு ரூபா 256,288 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | முறையான நடைமுறைகளை எடுத்து நட்டத்தை மேவுகை செய்தல் வேண்டும். |
| (இ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க அரசின் காணி முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை 3.5 ஆம் பந்தி | காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் கையளிப்பு கட்டளையொன்று மூலம் 2007 ஆம் ஆண்டின் போது பிரதேச செயலகத்தினால் 254 ஆம் இலக்க ஆரம்ப திட்டவரைபடத்தின் மூலம் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட 10.56 பேர்ச் அளவிலான 595 மற்றும் 596 ஆம் இலக்க இரண்டு காணித் துண்டுகளை எவ்வித அங்கீகாரமின்றி வெளித்தரப்பினருக்கு பயன்படுத்து வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது | குடியிருப்பாளர்களுக்கு முறையான வாடகை உடன்படிக்கை யொன்றில் மேற்கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 1,655,297 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 2,703,627 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 380 வீத வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 1,883,175 ஆக இருந்தது. அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் உள்ள நிலுவை வீதவரி மீதிகள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 மற்றும் 155 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மற்றம் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக்கோவையின் 33 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முடியவில்லையென | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் தம்புள்ள பிரதேச சபையிடமிருந்து வீத வரி அறவிடுவதற்காக கிடைத்திருந்த கணனி மென்பொருளுக்கு தவறாக தகவல்கள் உள்ளடக்கப்பட்டமை மற்றும் மென்பொருளில் தவறொன்று காரணமாக நீண்டகாலமாக பிழையான பெறுமதிகள் கிடைத்ததன் பேரில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 1,571,488 ஆன நிலுவை வீதவரி, பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட மீதியுடன் இனங்கவில்லையென வெளிப்படுத்தப்பட்டது. அந்த இணக்கமின்மைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருளில் தவறொன்று காரணமாக இத்தவறு இடம் பெற்றுள்ளதாக | வேறுபாடுகளுக்கு காரணங்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 5 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,104,142 அறவிடப்படாமல் இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 2,470,549 ஆன மீதிகளும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் மீதி ரூபா 743,995 ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 3,429,778 தொகை தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 555,159 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 3,240 ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் (ஆ) பிரிவின் 27 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் திண்மக் கழிவுப்பொருள் மீள்சுழற்சி மற்றும் வெளியேற்றும் இடங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி கையேற்கப்பட்டதன் பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை பயன்படுத்தி வரும் 17 காணித் துண்டுகளுக்குரிய உறுதிகள் அல்லது கையளிப்பு கட்டளை தயாரித்து உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருளில் தவறொன்று காரணமாக இத்தவறு இடம் பெற்றுள்ளதாக | காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்தி பயன்படுத்தவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நாவுல வாரச் சந்தையில் 04 கடைகளில் 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 145,885 ஆன கடை வாடகை மீதி நிலுவையொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது, அதில் 2012 திசெம்பர் 20 ஆந் திகதி வரை கொடுப்பனவு தவிர்ப்பு செய்யப்பட்ட நிலுவை ரூபா 77,285 ஆக இருந்தது. அத்திகதியின் பின்னர் 04 கடைகளும் முத்திரையிடப்பட்டு தவறாக ரூபா 68,600 என நிலுவையொன்று குறிப்பிடப்பட்டு ரூபா 145,885 ஆன மொத்த நிலுவையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாக | சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |